செ. கு. எண்: 087 நாள் :16.06.2016

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 16.6.2016

கிருஷ்ணகிரி மாவட்டம், யு.சிங்கிரிப்பள்ளி என்னும் இடத்தில் 15.6.2016 அன்று நடந்த சங்கிலி பறிப்பு சம்பவம் தொடர்பாக, கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் நகர காவல் நிலையத்தைச் சேர்ந்த உதவி ஆய்வாளர் திரு. கண்ணன், தலைமைக் காவலர்கள் திரு. முனுசாமி, திரு. தனபால், சிப்காட் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு. நாகராஜ் ஆகியோர் அடங்கிய குழுவினர் கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர், பாரதிதாசன் நகர் அருகே வாகனச் சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, செயின் பறிப்பு சம்பவத்தில் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்பட்ட நபர்களை பிடிக்க முற்படும் போது, அவர்கள் கத்தியால் தாக்கியதில் ஒசூர் காவல் நிலைய தலைமைக் காவலர் திரு. முனுசாமி என்பவர் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த தலைமைக் காவலர் திரு. முனுசாமி அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சம்பவத்தில் உதவி ஆய்வாளர் திரு. நாகராஜ் மற்றும் தலைமைக் காவலர் திரு. தனபால் ஆகியோர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருகின்றனர் என்ற செய்தியை அறிந்து நான்

மிகவும் வருத்தமடைந்தேன். இவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்கப்படுவதை உறுதிபடுத்தும்படி கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவருக்கு நான் உத்தரவிட்டுள்ளேன். இவர்கள் இருவரும் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற எனது விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த தலைமைக் காவலர் திரு. முனுசாமி அவர்களின் குடும்பத்திற்கு ஐந்து லட்சம் ரூபாயும், காயமடைந்த திரு. நாகராஜ் அவர்களுக்கும், திரு தனபால் அவர்களுக்கும் தலா 50,000/- ரூபாயும் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த சங்கிலிப்பறிப்பு மற்றும் காவலர்கள் மீது தாக்குதலில் ஈடுபட்டு தப்பிச் சென்றவர்களை விரைந்து கண்டுபிடித்து கைது செய்து சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி காவல் துறையினருக்கு நான் ஆணையிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9**